**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 522/2023**

**Prosecution witness : அ.சா.1** **Date : 24.10.2024**

| | |
|---|---|
| **Name : கதிரேசன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சித்திரைகோயிலில் குடியிருந்து நெசவு தொழில் செய்து வருகிறேன். விபத்தில் இறந்தவர் எனது மனைவி வளர்மதி ஆவார். 09.08.2023ம் தேதி அன்று மதியம் 03.30 மணிக்கு புக்கம்பட்டியில் உள்ள உறவினர்கள் வீட்டிற்கு கறி விருந்திற்கு செல்வதற்காக நான் என்னுடைய இரு சக்கர வாகனத்தில் எனது அக்கா மகள் நந்தினி என்பவரை உட்கார வைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தேன். எனது வண்டிக்கு முன்பாக இரு சக்கர வாகனத்தில் எனது அக்கா மகன் சுரேஷ்குமார் என்பவர் வண்டியை ஓட்ட அவருக்கு பின்னால் என் மனைவி வளர்மதி அமர்ந்து வந்தார்.

2) நாங்கள் சேலம் மார்கத்திலிருந்து மேச்சேரி ரோட்டில் சந்திரம்மா கடை பஸ் ஸ்டாப் அருகில் புக்கம்பட்டி செல்லும் சாலையில் நாங்கள் போய் கொண்டிருந்தோம். அப்போது எதிரே இனோவா காரை ஓட்டி வந்த எதிரி சுரேஷ்குமார் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். விபத்தின் காரணமாக வளர்மதி என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு சேலம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். சுரேஷ்குமார் என்பவருக்கு காதில் அடிப்பட்டு அம்மணி மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டு செல்லப்பட்டு

மூன்று நாட்கள் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றார். இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். ஆஜர் எதிரி தான் இனோவா காரை ஓட்டி வந்த நபர் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தார். இந்த விபத்து எதிரி காரை வேகமாக ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியதால் அவர் மீது தான் தவறு உள்ளது. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) விபத்து நடந்த சாலை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் சாலை என்றால் ஆமாம். மேச்சேரியிலிருந்து ஓமலூர் செல்லும் நான்கு வழி சாலை என்றால் ஆமாம். எனது அக்கா மகன் எந்த வாகனத்தில் சென்றார் என்றால் ஸ்கூட்டி இரு சக்கர வாகனத்தில் சென்றார். அந்த இரு சக்கர வாகனம் எங்கு சென்றது என்றால் எனக்கு முன்பாக சென்றது. சுரேஷ்குமார் எனக்கு என்ன வகையான உறவு என்றால் அக்கா மகன் ஆவார். என் அக்கா மகனுக்கு லைசன்ஸ் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4) நான் எவ்வளவு தூரம் பின்னால் வந்து கொண்டிருந்தேன் என்றால் 250 மீட்டர் தொலைவில் வந்து கொண்டிருந்தேன். நான் சென்று பார்த்த போது எனது மனைவியும், சுரேஷ்குமாரும் வாகனத்திலிருந்து கீழே விழுந்து கிடந்தார்கள் என்றால் ஆமாம். மேற்படி விபத்து நடுரோட்டில் நடந்தது என்றால் இல்லை. சேலத்திலிருந்து மேட்டூர் நோக்கி வரும் போது புக்கம்பட்டி பிரிவில் நடுரோட்டில் நடந்ததா என்றால் இல்லை. இந்த விவரத்தை நான் எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை.

5) நான்கு வழி சாலைக்கு நடுவே டிவைடர் பொறுத்தி சாலை பிரிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். டிவைடர் 5 அடி உயரமிருக்கும் என்றால் ஆமாம். கருப்பு தகரத்தில் மஞ்சள் நிறத்தில் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருக்கும் என்றால் ஆமாம். எனது வாகனத்தை நான் எந்த வேகத்தில் இயக்கினேன் என்றால் 40 கிலோமீட்டர் வேகத்தில் இயக்கினேன். லகுவம்பட்டிக்கும், புக்கம்பட்டிக்கும்

இடையே 50 கிலோமீட்டர் தொலைவு உள்ளது என்றால் ஆமாம்.

6) நான் எனது வீட்டிலிருந்து கிளம்பும் போது மணி 03.50 இருக்குமா என்றால் மதியம் 01.00 மணிக்கு கிளம்பினேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், பிறகு தான் வந்து பார்த்தேன் என்றால் விபத்து நடந்த பிறகு விழுந்து கிடந்த போது பார்த்தேன். கார் இரு சக்கர வாகனத்தில் மோதும் போது நான் நேரடியாக பார்த்தேனா என்றால் சாட்சி மீண்டும் இடிக்கும் போது பார்த்ததாக சொல்கிறார். 5 அடி உயரமுள்ள தடுப்பு உள்ள நிலையில் 250 மீட்டருக்கு பின்னால் வரும் நிலையில் என்னால் சம்பவத்தை நேரடியாக பார்ப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் அவ்வாறு இல்லை.

7) எனது மனைவியையும், சுரேஷ்குமார் இருவரையும் ஆம்புலன்சில் அனுப்பி வைத்தேன் என்றால் ஆமாம். நானும் உடன் சென்றேன். உடனடியாக மேச்சேரி காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேனா என்றால் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டு பிறகு தான் புகார் கொடுத்தேன். மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பாக போகும் வழியில் வேறு மருத்துவமனையில் எனது மனைவிக்கு சிகிச்சை அளித்தேனா என்றால் இல்லை. மருத்துவமனை செல்லும் வழியில் வேறு தனியார் மருத்துவமனை உள்ள நிலையில் அதனை தவிர்த்து நான் நேரடியாக அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் ஆமாம்.

8) என் மனைவிக்கு தலையில் அதிக ரத்தப்போக்கு காரணமாக என் மனைவி இறந்தார் என்றால் ஆமாம். நான் உடனடியாக அருகிலுள்ள வேறு மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருந்தால் எனது மனைவியை காப்பாற்றியிருக்க முடியும் என்றால் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் அரசு மருத்துவமனைக்கு செல்வதாக சொன்னதால் நானும் சென்றேன். நான் ஒரு ஆம்புலன்ஸ் ஓட்டுநருடைய பேச்சை கேட்டு காலதாமதம் செய்ததாலும், என்னுடைய தவறால் தான் என்னுடைய மனைவி இறந்துபோய்விட்டார் என்றால் இல்லை.

9) எனது அக்கா மகன் சுரேஷ்குமார் சாலை விதிகளை மதிக்காமலும், ஓட்டுநர்

உரிமம் இல்லாமலும், இனோவா கார் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதால் தான் எனது மனைவி இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது மனைவி இறந்ததற்கு நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். என் அக்கா மகன் மீது தவறு உள்ள நிலையில் வழக்கு தாக்கல் செய்தால் நஷ்ட ஈடு பெற முடியாது என்பதால் எதிரி மீது நஷ்ட ஈடு பெற வேண்டி வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 522/2023**

**Prosecution witness : அ.சா.2** **Date : 24.10.2024**

| | |
|---|---|
| **Name : மயிலி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் புதூரில் குடியிருந்து நெசவு தொழில் செய்து வருகிறேன். விபத்தில் இறந்தவர் எனது மகள் வளர்மதி ஆவார். கடந்த 6 மாதத்திற்கு முன்பாக அன்று மதியம் 02.30 மணிக்கு புக்கம்பட்டியில் உள்ள உறவினர்கள் வீட்டிற்கு கறி விருந்திற்கு செல்வதற்காக எனது மகள் மற்றும் சுரேஷ் இரு சக்கர வாகனத்தில் எனது மகளை வளர்மதி என்பவரை உட்கார வைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார். மற்றொரு வாகனத்தில் எனது மருமகன் கதிரேசன் ஓட்டிச் செல்ல நந்தினி என்பவரை வண்டிக்கு பின்னால் அமர்த்தி சென்றார்கள்.அ.சா.1 எனது மருமகன் ஆவார்.

2) அனைவரும் மேச்சேரி ரோட்டில் சந்திரம்மா கடை பஸ் ஸ்டாப் அருகில் காரை ஓட்டி வந்த நபர் மோதியதால் விபத்து ஏற்பட்டதாக அ.சா.1 போன் மூலமாக தகவல் தெரிவித்தார். பிறகு நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது எனது மகள் இறந்து போய்விட்டார். நான் பிரேத பரிசோதனையின் போது உடனிருந்தேன். சுரேஷ் என்பவர் வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் கையொப்பம்

காவல் நிலையத்தில் வைத்து பெற்றார்கள் என்றால் ஆமாம். யாருடைய கவனக்குறைவால் சம்பவம் நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

**ம.வி.இல்லை.**

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 522/2023**

**Prosecution witness : அ.சா.3** **Date : 24.10.2024**

| | |
|---|---|
| **Name : பழனியப்பன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சித்திரகோயிலில் குடியிருந்து நெசவு தொழில் செய்து வருகிறேன். விபத்தில் இறந்தவர் எனது மருமகள் வளர்மதி ஆவார். கடந்த 08.09.2023ம் தேதி முன்பாக அன்று மதியம் 02.30 மணிக்கு புக்கம்பட்டியில் உள்ள உறவினர்கள் வீட்டிற்கு கறி விருந்திற்கு செல்வதற்காக எனது மருமகள் மற்றும் சுரேஷ் இரு சக்கர வாகனத்தில் எனது மருமகளை வளர்மதி என்பவரை உட்கார வைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார். மற்றொரு வாகனத்தில் எனது மருமகன் கதிரேசன் ஓட்டிச் செல்ல நந்தினி என்பவரை வண்டிக்கு பின்னால் அமர்த்தி சென்றார்கள். விபத்து குறித்து கதிரேசன் என்னிடம் சொன்னார்.

2) அனைவரும் மேச்சேரி ரோட்டில் சந்திரம்மா கடை பஸ் ஸ்டாப் அருகில் காரை ஓட்டி வந்த நபர் மோதியதால் விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். பிறகு நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது எனது மருமகள் இறந்து போய்விட்டார். நான் எனது மருமகள் பிரேத பரிசோதனையின் போது உடனிருந்தேன். சுரேஷ் என்பவர் வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் கையொப்பம் காவல் நிலையத்தில் வைத்து பெற்றார்கள் என்றால் ஆமாம். யாருடைய கவனக்குறைவால் சம்பவம் நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

**ம.வி.இல்லை.**

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 522/2023**

**Prosecution witness : அ.சா.4** **Date : 24.10.2024**

| | |
|---|---|
| **Name : பச்சையம்மாள்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சித்திரகோயிலில் குடியிருந்து காட்டு வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்தவர் எனது மருமகள் வளர்மதி ஆவார். கடந்த 6 மாதத்திற்கு முன்பாக மதிய நேரத்தில் புக்கம்பட்டியில் உள்ள உறவினர்கள் வீட்டிற்கு கறி விருந்திற்கு செல்வதற்காக எனது மருமகள் மற்றும் சுரேஷ் இரு சக்கர வாகனத்தில் எனது மருமகளை வளர்மதி என்பவரை உட்கார வைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார்.

2) அனைவரும் மேச்சேரி ரோட்டில் சந்திரம்மா கடை பஸ் ஸ்டாப் அருகில் காரை ஓட்டி வந்த நபர் மோதியதால் விபத்து ஏற்பட்டதாக எனது மகன் கதிரேசன் சொன்னார்கள். பிறகு நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது எனது மருமகள் இறந்து போய்விட்டார். நான் எனது மருமகள் பிரேத பரிசோதனையின் போது உடனிருந்தேன். சுரேஷ் என்பவர் வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் கையொப்பம்

காவல் நிலையத்தில் வைத்து பெற்றார்கள் என்றால் ஆமாம். யாருடைய கவனக்குறைவால் சம்பவம் நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

**ம.வி.இல்லை.**

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**